
NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:03:44

Registered as a Newspaper

When only the best is Good enough

BUY
SOLIDE Pumps

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1-50

தேர்மோஸ்ரற் உடன் கூடிய
CROMPTON GREVES
மோட்டாரிற்கு இணைக்கப்பட்ட
சொலிட்
பம்புகளையே
வாங்குங்கள்

சுடர் 2: யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு புரட்டாதி மீ 12 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 04 (28 — 09 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 261

## யாழ் மாவட்டத்தில் பாதுகாப்பு, வீதிரோந்து நடவடிக்கையில் ஈடுபட இந்தியப் படைக்கு பணிப்பு

### கூட்டிணைந்து செயற்படுமாறு விடுதலைப் புலிகளுக்கு அழைப்பு

— எம். பேரின்பநாயகம், கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், செப். 28
யாழ். மாவட்டத்தில் முழு அளவில் வீதி ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் சகல அரச அலுவலகங்கள், பொதுச் சொத்துக்கள் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பு வழங்கும்படியும் இந்திய சமாதானப் படையினருக்கு உத்தரவிடப் பட்டிருக்கிறது.

இந்திய அமைதிப்படையின் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங் இந்த உத்தரவை விடுத்திருக்கிறார்.

மேற்படி ரோந்து, பாதுகாப்பு நடவடிக்கைகளில் தம்முடன் கூட்டிணைந்து செயற்படுமாறு விடுதலைப் புலிகளுக்கு இந்திய சமாதானப் படையினர் அழைப்பு விடுத்திருப்பதாகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

மேஜர் ஜெனரல் ஹர்கீர்த்சிங்கின் உத்தரவு கிடைத்ததும் இந்திய சமாதானப் படையின் யாழ் கோட்டை முகாம் பொறுப்பதிகாரி பராபுலிகளுடன் உடனடியாகத் தொடர்புகொண்டார்.

மூன்று ஜீப் வண்டிகள் சகிதம் நேற்று மாலை அவர் திருநெல்வேலியில் உள்ள புலிகளின் தலைமையகத்துக்கு வந்து சேர்ந்தார்.

அங்கு புலிகளின் பிரமுகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கத்துடன் அவர் பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாதுகாப்பு, மற்றும் ரோந்து நடவடிக்கைகளில் தங்களுடன் கூட்டிணைந்து செயற்படுமாறு அவர் புலிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து புலிகள் தற்போது ஆராய்ந்துவருவதாகத் தெரியவருகிறது.

# புலிகளின் விளக்கம் கையளிப்பு; இறுதிமுடிவுடன் டிக்ஸிற் வருவார்

## பூதவுடல் இன்று மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம், செப். 28
மறைந்த தியாகி திலீபனின் பூதவுடல் இன்று மாலை அவரது விருப்பப்படி யாழ் பல்கலைக் கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு கையளிக்கப்படும்.

திலீபனின் பூதவுடல் இன்று காலை ஊரெழுவில் உள்ள திலீபனின் இல்லத்தில் இருந்து புன்னாலை கட்டுவன் சந்தியூடாகச் சுன்னாகத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அங்கிருந்து கே. கே. எஸ். வீதி வழியாக யாழ்ப்பாணம் வந்து தீவுப் பகுதி மக்களின் அஞ்சலிக்காகப் பூதவுடல் அங்கு எடுத்து செல்லப்படும்.

பின்னர் பூதவுடல் பண்ணை ஊடாக மானிப்பாய் வீதிவழியாக சுதுமலையைச் சென்றடையும்.

சுதுமலையில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின் அவரது பூதவுடல் யாழ் மருத்துவக் கல்லூரியிடம் கையளிக்கப் படும்.

## இடைக்கால அரசுக்குப் போதிய ஆட்சி அதிகாரம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 28
வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால அரசு அமைப்பது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது விளக்கங்களை நேற்றுக் கையளித்தனர். அதைத் தொடர்ந்து இடைக்கால அரசு அமைப்பது சம்பந்தமான பூரண விவரங்களுடன் - இறுதி முடிவுடன் - இந்தியத் தூதுவர் திரு. ஜே என். டிக்ஸிற் மீண்டும் பலாலிக்கு வருவார். அவர் இன்று மாலை அல்லது நாளை காலை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இடைக்கால அரசு, புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கை என்பன சம்பந்தமாகப் பேசுவதற்காக கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் ஜே. என். டிக்ஸிற் ஒருவாரத்தில் இரண்டு தடவைகள் வடக்கே வந்திருந்தது தெரிந்ததே.

கடந்த சனிக்கிழமை

(6ம் பக்கம் பார்க்க)



விடுதலைப் புலிகளின் அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் திலீபனின் பூதவுடலுக்கு விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் அஞ்சலி செலுத்தும் போது எடுக்கப்பட்ட படம். (எ-10)

## உணர்ச்சி வசப்பட்டு ஏதும் செய்யாதீர்!

### கூட்டணி வேண்டுகோள்

சென்னை, செப். 28
தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகர் திலீபனின் துரதிஷ்ட மரணம் குறித்து உணர்ச்சி வசப்பட்டு ஏதுப் செய்யாதீர். அப்படிச் செய்தால் அது இந்திய - இலங்கை ஒப்

(6-ம் பக்கம் பார்க்க)

## இந்தியப்படை சுட்டு கிரானில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 28
மட்டக்களப்பு கிரானில் நேற்று இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பொது மக்களும் விடுதலைப் புலி ஒருவரும் காயமடைந்தனர்.

போராளி இயக்கம் ஒன்று இத்தகவலைத் தெரிவித்தது.

திலீபனின் மறைவை அடுத்து ஏற்பட்ட அசம்பாவிதங்களின் போது மூவர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் இராஜி என்ற விடுதலைப்புலி உட்பட மூன்று பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தச் சம்பவத்தில் ஸ்ரீலங்கா பொலீஸ் படையைச் சேர்ந்த ஒருவர் காயமுற்றதாக அரச அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இச்சம்பவத்தையடுத்து அங்கு பதற்றநிலை ஏற்பட்டிருக்கிறது. (உ-10)

## முச்சந்தி முரளி



என்ன, எல்லாமே எதிரும் புதிருமான விஷயங்களாய்த் தான் இருக்குது........!

## சுதுமலையில் அஞ்சலிக் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 28
இன்று மாலை 4 மணிக்கு சுதுமலையில் நடைபெறும் திலீபனின் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டு உரையாற்றுவர் என அறிவிக்கப்படுகிறது.

இன்றுமாலை பூதவுடல் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர் சுதுமலையில் வைத்தே யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திடம் கையளிக்கப்படும்.

நாம் ஒன்று கேட்க இந்தியா வேறொன்று செய்கிறது;

## போராட்டத்தைக் கைவிடோம்;

### இலட்சிய உறுதியின் உச்சக்கட்டம் திலீபன்-பிரபா

யாழ்ப்பாணம், செப். 28
நாம் உருப்படியான செயல்முறைத் திட்டங்களைக் கேட்க இந்தியா உறுதிமொழிகளைத் தருகிறது. நாம் விளக்கங்களைக் கேட்க இந்தியா அவகாசம் கேட்கிறது. நாம் கோரிக்கைகளை முன்வைக்க இந்தியா நிபந்தனைகளைப் போடுகிறது. இந்தச் சூழ்நிலையில் நாம் போராட்டத்தைக் கைவிடமுடியாது. மாறாக, போராட்டத்தைத் தீவிரப்படுத்த வேண்டும். தமிழீழ மக்களின் ஒன்றுபட்ட எழுச்சியாக எமது போராட்டம் புரட்சிவடிவம் பெற வேண்டும்.

—தியாகி திலீபனின் மறைவு குறித்து புலிகள் தலைவர் வே பிரபாகரன் நேற்று ஆற்றிய உரையில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த உரையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது. வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது. அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவை எல்லாம் எமது ஆயுதப்போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீர சாதனைகள்.

ஆனால் எனது அன்பான

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். அதிர்ச்சி

சென்னை, செப். 28
திலீபனின் மரணம் குறித்துத் தமிழக முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆழ்ந்த அதிர்ச்சி, வேதனையைத் தெரிவித்திருக்கின்றார்.

அமெரிக்காவில் இருந்து முதலமைச்சர் அனுதாபச் செய்தியை விடுத்தார்.

திலீபனின் மரணம் துரதிருஷ்டவசமானது என முதலமைச்சர் தனது அனுதாபச் செய்தியில் தெரிவித்தார்.

திலீபனின் குடும்பத்துக்கும், புலிகள் இயக்கத்தினருக்கும் தமது ஆழ்ந்த அனுதாபத்தை முதலமைச்சர் தெரிவித்தார். (எ)

சுபநேரம்
28-09-1987
புரட்டாதி 12
திங்கட்கிழமை
சுபநேரம்:-
12.02 முதல் 1.32வரை
ராகுகாலம்:-
7.32 முதல் 9.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஷஷ்டி விரதம்

## முல்லைத்தீவு, மட்டுநகரில் தொடரும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 28
மட்டக்களப்பு, கல்முனை மாவட்டத்தில் உண்ணாவிரதப் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினரான திரு. திருச்செல்வம் இன்றுடன் ஆறுவது நாளாக நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகின்றார்.

முல்லைத்தீவு கச்சேரிக்கு முன்பாக பொலீஸ் நீதிமன்ற வளவினுள் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறுகிறது.

உண்ணா விரதத்துக்கு ஆதரவாக தினமும் 25 பேர் வரையில் அடையாள உண்ணாவிரதமும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை திருச்செல்வத்தின் உடல் நிலையில் பெரும் மாறுதல் ஏற்பட்ட

6 ஆம் பக்கம் பார்க்க)




உயிர் நீத்த திலீபனின் பூதவுடலுக்கு ஈரோஸ் பிரமுகர்கள் பாலகுமார், பரா, சங்கர் ஆகியோர் சனிக்கிழமை இரவு அஞ்சலி செலுத்திய போது எடுக்கப்பட்ட படத்தைக் காணலாம். (படம் - ஜெயம்)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:03:44



விடுதலை வேங்கை, வீரத் தியாகி



# திலீபனுக்கு

எமது

## வீரம் செறிந்த வணக்கம்



வரலாற்றுக் காவியமே
வதைபட்ட ஓவியமே
மெழுகுவர்த்தியே - நீ
உருகிவிட்ட தாருக்காகவோ?
சரித்திரம் உன்னை இமயத்தில் வைக்கும்


**பலநோக்குக் கூட்டுறவு சங்கம் - சுன்னாகம்.**

---

● தியாகச் சுடர் ●



# திலீபனுக்கு வீரவணக்கம்



ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா

- உதயன் நிறுவனத்தினர்

NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:03:44

## அவன் இறக்கவில்லை----!

✶ அவன் இறக்கவில்லை
ஈழத்தில் இன்றுதான்
பிறக்கின்றான்!
துறக்கவில்லை வாழ்வுதனைத்
துன்பத்தைக் கண்டு மனம்
கலங்கவில்லை! — காலனவன்
மன்றுவழிப் பாதைதனை
மாற்றுது விட்டொழிய
திலீபனவன் — இறக்கவில்லை
இன்றுதான் ஈழமதில்
பிறக்கின்றான்!
விடிவெள்ளி உதிக்கு முன்னே
உன் சொந்தவுடம்பதுவோ
ஊராரைக் கிளர்ந்தெழுப்ப
கண் சொந்த மில்லாத
கயவனாய் அழுகின்றோம் — உன்
சொந்த மென்னதுவோ?
உற்றாரோ உறவினரோ
விண் சென்று பார்த்த பின்பு
விடை சொல்ல நீ வரவே
இன்றுனக்கு — இறப்பென்று
எண்ணவில்லை! மாறாசப்
பிறக்கின்றாய்; — புண்ணியனே
தமிழ்ப் பூமியிலே! புதுப்பூவாய்!

— ரவி —

## அணையாத வீரமே!

பொன்னான தமிழ் ஈழத்திலே அன்று
புத்தம் புது மலராய்ப் பூத்த புதுமலர் நீ
கண்ணான தமிழ் மக்களுக்காக இன்று
கருகிடத்தான் துணிந்தாயே!
ஆவியோ நிலையிற் கலங்கிய போதிலும்
அவயவங்கள் யாவும் செயலற்ற போதிலும்
அணைகின்ற விளக்காய் நீ சுடர் விட்ட
போதிலும்
ஆழமான உன் மனத்தின் இலட்சியமே
- வாழ்ந்ததுவே-
பாடுகின்ற பறவையாய்ப் பறந்திடும்
வயதிலே
பாவி எமனுக்கு உன்னை இரையாக்க
நினைத்தாயே
பாசம் நிறைந்த உன்நாட்டு மக்களை நீ
பட்டினிகிடந்தே பிரிந்திடத் துணிந்தாயே?
பொறுக்கவில்லையே ஐயா உன்கோலம்தான்
பொங்கியெழத் துடிக்கின்றதே ஐயா!
இந்தப்பொறுக்காத மனந்தான்
புவியில் ஒரு புலியாகப் பாய்ந்த உன்
புகழ்தான்
பூமி இருக்கும்வரை வீரமணம் பரப்பும்
ஐயா
ஐந்நூறு பரம்பரையாய் இருந்து வந்த
அடிமை விலங்கை
அறுத்தெறியப் புறப்பட்ட வீரவேங்கை நீ
ஆயுதம் ஏந்திநின்ற உன் கரங்கள் இன்று
அசைவற்று ஓய்ந்ததன் காரணம்தான்
என்னையா?

— விடுதலைப் பிரியா


# கண்ணீர் அஞ்சலி

வீர மரணமடைந்த
தியாக வேங்கை
★ திலீபனுக்கு ★

HORIZON ENTERPRISES
நிர்வாகியினதும் ஊழியர்களினதும்
கண்ணீர் அஞ்சலி



ஒப்பந்தம் விடுதலைப் பயணத்தின் முடிவல்ல
வெறும் வெள்ளைச் சாயம் என்று
தீர்க்க தரிசனத்துடன் எடுத்துரைத்த
தீந்தமிழ்ச் செல்வமே திலீபா!
கட்டுடல் கொண்டு பட்டுடல் பைங்கொடியை
கட்டித் தழுவும் இளங்காளை வயதினிலே
பொன்மேனியைப் புண்மேனியாக்கும்
தியாகச் செம்மல் திலீபா!

HORIZON ENTERPRISES
97/1 POINT-PEDRO ROAD
KALVIYANKADU
JAFFNA


# காந்தியின் அகிம்சை வழியில் ஈழத்தில் முதற் களப்பலியான தியாகச் சுடர் திலீபன்

அஞ்சினர்க்குச் சத மரணம் அஞ்சாத வீரர் தமக்கோ ஒரு மரணம். பாரத தேசம் விடுதலையடைய ஆரம்பித்த காலம் தொட்டு இன்று தமிழீழம்விடுதலையடைய

## தியாகச் சுடரே திலீபா!

ஓ திலீபா!
உன் மரணம்
மறக்க முடியாது
அது ஆயிரம்
ஜென்மத்திலும்
உலகில் உயிர்க்கும்
ஆம் - மரணம் - உன்
மரணம்
உயிர்க்கும்
உன் புனிதமான
நாமம் நிலைக்கும்
இந்தப் புவியிலே
அலைகள் ஓயுமட்டும்
நிலைக்கும்
தமிழின் உய்வுக்காய்
உன் உயிர் பாய்த்த
உண்மைகள்
உறங்காது
அது ஆயிரம்
காலத்தும்
நிலைக்கும்
நீ நித்திலம்
அதன் ஜீவித ஒளியும்
ஜீவ களையும்
மங்காது
மங்கவே மங்காது
கரை புரண்ட
உன் பொது நலம்
கலங்காத உறுதி
இவை விடியலை
மக்களுக்குப்
புலப்படுத்தும்
புலப்படுத்த
அது உதயமாகும்
உதய மாகின்
அந்த உதயத்தில்
பட்சிகளும்
திலீப திலீப என்றே
குரல் கொடுக்கும்
நாம் உனக்கு
ஆலயம் சமைப்போம்
அதில் எழுந்தருள்வாய்
தியாகச் சுடரே
திலீபா!

சரவணமுத்து சசிகரன்
— யாழ் இந்து —

வீர சுவர்க்கமடைந்த விடுதலை வீரர்வரை, வாலிபர்கள் செய்த, செய்யும் தியாகங்கள் எமக்கெல்லாம் உந்து சக்தியாக விளங்குகின்றன.

தோற்றத்தால் ஒல்லியானவன்; வயதில் இளையவன்; தூய தொண்டிலோ மெழுகுவர்த்தி, ஆற்றலில் மின் விளக்கு; இளைஞர்களுக்கு அவனொரு கலங்கரை விளக்கு.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஈழத் தமிழ் மண்ணுக்குக் கிட்டிய மாபெரும் வீரப்புதல்வன் எமக்கெல்லாம் முன்னோடி தம்பி திலீபன்.

இலட்சக் கணக்கான தமிழ் இளைஞர்களின் இதயக் கோவிலிலே இன்று வீரத்திலகமாகக் கோலோச்சும் பேறு பெற்றவன் தியாகி திலீபன்.

அவனது எழுச்சி, ஆர்வம், தணியாத தமிழீழ விடுதலைத் தாகம் ஒரு கவர்ச்சிகரமான கருப்பொருளை வரலாற்று ஆசிரியர்களுக்கு வழங்கிவிட்டது.

இளைஞர் பலர் ஒவ்வொரு நாடுகளிலும் சுதந்திரமடைந்து விடுதலை பெற அவ்வப்போது அருந்தொண்டாற்றினார்கள். அவர்களைப்பற்றி நாம் திரும்பிப் பார்ப்பதன் மூலம் நாமும் விடுதலை உணர்வு பெற்றுத் தமிழீழ விடுதலைக்காக எம்மையே முற்றாக அர்ப்பணிக்கலாம்.

பாரத தேசத்தில் இந்திவெறி கட்டவிழ்த்து விடப்பட்ட போது தமிழகத்தில் தாளமுத்து, நடராசன் ஆகிய இரு தியாகச் செம்மல்கள் தம் இன்னுயிர்களை தமிழ் மொழி காக்கும் முதற் காணிக்கையாகச்செலுத்தினர். இந்தி வந்தால் தமது நெஞ்சின் மீது நெருப்பு விழுந்து விட்டதாகும் என்று கருதி தமிழ் மறவன் சின்னச்சாமி தனக்குத்தானே தீ மூட்டி உயிரைக் காணிக்கையாக்கினான்.

**வாஞ்சிநாதன்**

இந்திய விடுதலைப் போராட்டத்தில் அழியாத இடம்பெற்ற வாஞ்சிநாதன் என்றும் மக்களால் போற்றப்படுகின்றான். இனவெறிக் கொள்கை உச்சக்கட்டத்தை அடைந்ததைப் பொறுக்கமுடியாத வாஞ்சிநாதன் பொங்கி எழுந்தான். அதன்பயன் அன்று மணியாச்சி ஸ்ரேசன் வழியாக ஆஷ்துரை கொடைக்கானல் போய்க் கொண்டிருந்தான். மணியாச்சியில் ரயில் வந்து நின்றது. ஆஷ்துரையைச் சுட்டு வீழ்த்தினான் வாஞ்சிநாதன். எதிரியைச் சுட்ட அதே இடத்திலேயே காவலாளிகள் தன்னைப் பிடிக்கும் முன்னரே தன்னுயிரைப் போக்கிக்கொண்டான்

## சித்திரா

வாஞ்சிநாதன்.

ஈழத்திலேயே சத்தியாக்கிரகப் போராட்டங்களிலும், பகிஷ்கரிப்புகளிலும் எத்தனை பேர் செத்தார்; எத்தனை பேர் நோயுற்றார்; எத்தனை பேர் பாதி உயிர் சுமந்து வாழ்கின்றார்?

மட்டக்களப்புத் தமிழக எருவில் மூர்த்தி விழி இழந்தான்! முழு நேர ஊழியனும் பாவிலுப் பிள்ளை குடலிழந்து பரிதவித்தான்! மார்புநோய் படுக்கையிலேயே காசி ஆனந்தன் உயிர் துடித்தான்!

மட்டுநகர் வீதியிலே இராசேந்திரன் மணி மார்பு கொட்டிய செங்குருதி தமிழுக்காகவல்லவா? சிங்களக்கொடி அவிழ்க்கச் சென்ற திருடலை நடராசன் தங்கத் தமிழ்மேனி தமிழுக்காகச் சாய்ந்ததல்லவா?

மலையகத்தில் தமிழ் மொழிக்காய் ஐயாவு, பிரான்சீஸ் அழித்த கதை நாடறியுமல்லவா?

**சிவகுமாரன்**

இவர்களின் பின்னர் தமிழாராய்ச்சி மாநாட்டில் மாண்டு மடிந்த எழுவரின் கண்ணீர் காவியம் படித்து முடிவதன் முன்னர் முதற் தமிழன் — இளைஞன் தமிழுக்காகத் தன்னுயிரை ஈந்தான். அவன் தான் சிவகுமாரன்.

இருபத்தினான்கு வயதில் தான் பிறந்த மண்ணின் விடுதலைக்காக — தான் பேசும் மொழியின் உரிமைக்காகத் தன்னையே அர்ப்பணித்தான் சிவகுமாரன். ஒருவன் தன் மரணத்தின் பின்னர் விட்டுச் செல்லும் புகழ் அல்லது இகழைக் கொண்டே அவனது வாழ்வை மதிப்பீடு செய்யமுடியும்!

ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
உதியம் இல்லை உயிர்க்கு.

இவ்வாறு எடுத்துக் காட்டினார் திருவள்ளுவர். இறந்த பின்னரும் இசைபட வாழும் வாழ்வே தமிழன் கண்ட வீரப் பெருவாழ்வு! அத்தகைய வீர வாழ்வை இறந்த பின்னரும் வாழ்ந்துகொண்டிருக்கும் பெரு வாழ்வை சிவகுமாரன் பெற்றுவிட்டான். வாழும்போது அன்னலட்சுமி பொன்னுத்துரையின் புத்திரனாக வாழ்ந்த சிவகுமாரன் வீரமரணம் அடைந்த பின்னர் தமிழ் மக்கள் வீடுகளில் வாழும் பிள்ளையாகி விட்டான்.

தமிழ் மக்களின் நெஞ்சங்களில் விடுதலைக் காவிய நாயகனாக—அழியாத ஓவியமாக அவன் இடம் பெற்றான்.

அவன் விட்டுச்சென்ற பணியை தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று செய்து வருகிறார்கள். ஆயுதமேந்திய போராட்டத்தின் போது தாம் பிறந்த நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்த வீரப் புதல்வர்கள் தொகை 650 ற்கும் மேற்பட்டு விட்டது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இயக்கங்களின் ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர் — ஒப்பந்தம் சரியாக செயற்படாமை கண்டு தமிழீழ

(5 ஆம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

**குறள்:**

கடுஞ்சொல்லன் கண்ணில னாயின் நெடுஞ்செல்வம்
நீடின்றி ஆங்கே கெடும்.

**பொருள்:**

கடுஞ்சொல் உடையவனாய்க் கண்ணோட்டம் இல்லாதவனாய் உள்ளவனுடைய பெரிய செல்வம் நீட்டித்தல் இல்லாமல் அப்போழுதே கெடும்.


## அறிவித்தல்

**Lanka Cement Limited,**
**Kankesanthurai**
**TENDER No : LCL / TCEM / 01 / 87**

பொதி நிரப்பு நிலையத்தில் (Packing Plant) இருந்து சீமெந்துப் பொதிகளை கொழும்பு, கண்டி, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எமது உப களஞ்சியங்களுக்கு லொறி வண்டிகளில் ஏற்றிச் செல்லுதல் :-

[கேள்விப் பத்திரங்கள் சேர்க்கப்படும் திகதி நீடிப்பு.

மேற்படி கேள்விப்பத்திரங்கள் 07-10-87 மாலை 3.30 மணிக்குப் பின் விநியோகிக்கப்படமாட்டாது.

கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10.00 மணிக்கு முன் உதவி பொது முகாமையாளர் காரியாலயத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டகத்தில் சேர்க்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 09-10-87 அன்று காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும்.

பிரதி பொது முகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
25-09-87 காங்கேசன்துறை.


# வரலாறு கண்டிராத வீரவேங்கை திலீபன்

### பல்கலைக்கழக ஆசிரியர் அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 28

தீர்க்க தரிசனமிக்க வார்த்தைகளைக் கூறி அவற்றைச் செயலில் காட்டி வரலாறு கண்டிராத மாபெரும் வீரன் ஆகிவிட்டான் திலீபன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரிய சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது;-

திலீபனுடைய தியாகத்துக்கு நிகரான தியாகம் அகிம்சைப் போராட்டத்தை உலகுக்கு எடுத்துக்காட்டிய இந்திய மண்ணிலேயே காண முடியாது. வாழவேண்டிய வயதில், வரலாறு முழுவதும் வாழக்கூடிய வகையில் வீரத்தியாகம் செய்துவிட்ட திலீபனின் தியாகம் நமது மக்களுக்கு மேலும் வீரமிக்க எதிர்காலத்தை வழங்கப் போகிறது என்பது மட்டும் நிச்சயம்.

தென்னாசியாவின் வல்லரசு ஸ்தானத்தை நிரந்தரமாகக் கட்டிக் காக்கவும், இலங்கையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவும், தமிழரைப் பகடைக்காய் ஆக்கிவிட்ட இந்தியா தான் திலீபனின் மரணத்துக்கும் பொறுப்பேற்க வேண்டும் என்பதை உலகம் கூறப்போகின்றது

உண்ணாவிரதம் மூலம் ஒரு வீரமரணம் ஏற்பட்டுவிட்டது தொடரப்போகும் வீரமரணங்களோ பல. இதை இந்திய அரசு விளங்காதது மாதிரிக் காட்டிக்கொள்வதும் விஷமப் பிரசாரம் செய்வதும் அதனு

(5 ஆம் பக்கம் பார்க்க)

NATIONAL LIBRARY OF SRI LANKA 15/09/2023 11:03:44

## சின்னஞ் சிறு விளம்பரங்கள்

### பிறந்தநாள் வாழ்த்து

பலாலி ராஜா பவானி தம்பதிகளின் அன்புப் புதல்வி சுகன்யா நேற்று முதலாவது பிறந்ததினத்தைக் குதூகலமாகக் கொண்டாடினுர். இவரை அப்பா, அம்மா, அண்ணு, வசந்தி, அப்பப்பாமார், அப்பம்மாமார், சித்தப்பாமார், சித்தி, அத்தைமார், பாட்டி, முல்லைத்தீவு மாமாமார், அன்ரிமார் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தினுர்கள். [1531]

மானிப்பாய் மருதமஹால் தங்கராஜா தம்பதிகளின்தவப் புதல்வன் மருதராஜன் 27-9-87 இன்று ஐந்தாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர். இவரை மருதடியான் அருளுடன் சீரும் சிறப்பும் பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென்று பெற்ருேர், அப்பம்மா, அக்கா, சித்தப்பா, பெரியம்மா, மாமா குடும்பத்தவர்களும், அச்சாஅன்ரி மற்றும் உற்ருர் உறவினர்களும் வாழ்த்துகின்றனர். [1707]

**WANTED**

600 Sq. feet office space required, preferably upstairs within half a mile radius from Jaffna Main Bus stand. Contact immediately. Mack Travels, No. 8, 1st Lane, Point Pedro Road, Jaffna.

**BUYING & SELLING**

The following Electric goods and household items are available for sale. Electric oven, Electric hotplate, Typewriter, Fridge and other Household goods. We buy household goods Electric items and other office equipment furnitures Etc. Mack Travels, No. 8, 1st Lane, Point-Pedro, Jaffna. Selvam Photo Colour, Achchuvely

**சேவை**

புத்தம் புதிய அல்லது மறுசீரமைக்கப்பட்ட மினிபஸ், கார், வான், ELF டிரக், மோட்டார் சைக்கிள் ஆகியன யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து தரப்படும் தொடர்பு கொள்க K.T நாதன், பஸ் நிலையம் முன்பாக, நெல்லியடி, கரவெட்டி. [1530]

# கிளிவெட்டி, மேன்காமத்தில் தமிழர் மீளக் குடியேற அச்சம்

மூதூர், செப் 28

மூதூர்ப் பகுதியில் உள்ள கிளிவெட்டி, மேன்காமம் முதலான கிராமங்களைச் சேர்ந்த தமிழ்க்குடும்பங்கள் மீண்டும் தங்களது சொந்தக் கிராமங்களில் மீளக் குடியேற அச்சம் தெரிவித்துள்ளனர்.

தெகிவத்தை, சேருநுவர முதலான சிங்களக் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் அதைத் தொடர்ந்து நிலைகொண்டிருப்பதால் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வு காரணமாகவே மக்கள் மீளக் குடியேறப் பயப்படுகின்றனர்.

இப்பகுதியில் இந்திய சமாதானப் படையினர் இதுவரை எந்த முகாம்களையும் அமைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1985ஆம் ஆண்டு மார்ச்மாத இறுதியில் மூதூர்ப் பகுதியில் வன்செயல்கள் வெடித்தபோது இக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ்மக்கள் சேருநுவர சிங்களக் கிராமத்தில் நிலைகொண்டிருந்த படையினரால் கொடுமையாகத் தாக்கப்பட்டனர். இதனையடுத்து இப்பகுதி மக்கள் தங்கள் சொந்த மண்ணில் இருந்து அகதிகளாக வெளியேறினர்.

இக்கிராமங்களில் இடம்பெற்ற வன்செயலின்போது 75க்கும் மேற்பட்டோர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அனர்த்தங்களின் அச்ச உணர்வு இன்னும் இக்கிராமமக்களின் மனதில் இருந்து நீங்கவில்லை. (உ-98)

## இந்தியா வேதனை தெரிவிக்கிறது

புதுடில்லி, செப். 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற்பிரிவுப் பொறுப்பாளர் திரு. திலீபன் மறைவு குறித்து இந்தியா தனது வேதனையைத் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உண்ணு விரதம் மேற்கொண்ட திரு. திலீபன் மரணமுற்றதை அறிந்து இந்தியா மிகுந்த வேதனை அடைகின்றது.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் ஆகையால் திரு. திலீபன் தனது உண்ணுவிரதத்தைக் கைவிட வேண்டும் என்றும் இந்தியா மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தது.

இதையும் மீறி அவர் உண்ணு விரதத்தைத் தொடர்ந்தது வருந்தத்தக்கது.

இப்படிப் புதுடில்லியில் இந்திய அரசுப் பிரதிநிதி தெரிவித்தார். (இ-எ)

## சம்பளம் அதிகரிப்பு

மானிப்பாய், செப் 28

சேவைக்காலப் பயிற்சி ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

சேவைக்காலப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றும் ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த விசேட படித்தொகை இவ்வருடம் மூன்ரும் தவணையிலிருந்து ரூபா 40 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒருநாளுக்கு விசேட படியாக ரூபா 10.50 வழங்கப்பட்டு வந்தது தெரிந்ததே. [உ-90]

**மக்கள் முகம்**

### கிளிநொச்சி தமிழர் ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

கிளிநொச்சி, செப் 28

தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் நடப்பு வருட நிர்வாகிகள் வருமாறு:-

தலைவர்: திரு. கே. சின்னராசா (அதிபர் அக்கராயன் மகாவித்தியாலயம்) உபதலைவர்கள்: திரு பொன் தில்லைநாதன் (அதிபர் கனகாம்பிகை வித்தியாலயம்) திரு. எஸ். பேரம்பலம் (ஆசிரியர்) செயலாளர்: திரு. கனகமகேந்திரா (ஆசிரியர்) உபசெயலாளர்: திரு. பி இராமச்சந்திரன் (ஆசிரியர்)

பதினெட்டுப்பேர் கொண்ட நிர்வாகிகளும் தெரிவாகினர். (இ-76)

### பழைய மாணவர் சங்கம்

வட்டுக்கோட்டை, செப். 28

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரியின் 'ஒட்லி' மண்டபத்தில் சங்கத்தலைவர் திரு.என். சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

பின் வருவோர் புது வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்:- திரு. ஏ. இராஜசிங்கம்,

உபதலைவர்கள்:- திரு. என். செல்வராஜா திரு. எம். ஏ. வேலுப்பிள்ளை, திரு. உ. ந. தேவகடாட்சம், திரு. ஜி. இராஜநாயகம்.

செயலாளர்:- திரு. எம். சிதம்பரநாதன்.

பொருளாளர்:- திரு. ரீ. ஆனந்தரத்தினம்.

செயற்குழு உறுப்பினர்கள் 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

### விகாரைகள் புனரமைப்பு

மட்டக்களப்பு, செப் 27

மட்டக்களப்பு நகரிலுள்ள மங்களராமயா, ஐயந்திபுர விகாரைகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

## யாழ் பாடசாலைகள் 183 நாட்கள் இயங்கவேண்டும்

மானிப்பாய், செப். 28

இந்த ஆண்டு இரண்டாம் தவணை வரை 114 நாட்களும், இவ்வருடம் முடிவடையும் போது 183 நாட்களும் பாடசாலைகள் நடைபெற வேண்டும் என கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் ஜனுப் எம். எம். மன்சூர் இத்தகவலை யாழ்ப்பாண பாடசாலைத் தலைவர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

மேற்படி கால எல்லைக்குக் குறைவான வேலை நாட்களைக் கொண்டுள்ள பாடசாலைகள் கால எல்லையை பூர்த்தி செய்யும் வகையில் இழக்கப்பட்ட நாட்களுக்குபதில் பாடசாலைகளை சனிக்கிழமைகளில் நடாத்துமாறும் கல்விப்பணிப்பாளர் பணித்துள்ளார். (உ-90)

## மூதூர்ப் பகுதி விவசாயிகளுக்கு கடன்

### அரசு நடவடிக்கை

மூதூர், செப் 28

மூதூர் பகுதியில் இம்முறை விவசாயிகள் பெரும் போக நெற்செய்கையில் ஈடுபட கடன் உதவி வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொண்டுள்ளது.

இக் கடன் கொடுப்பனவு தொடர்பான தரவுகளும், தகவல்களும் சேகரிக்கும் துரிதநடவடிக்கைகளில் இப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இப்பகுதியில் இடம்பெற்ற வன்செயல்கள், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இங்கு கடந்த இரண்டு வருடங்களாகநெற்செய்கையும், உப உணவுப்பயிர்ச் செய்கையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தன. (ஒ-98)

## இன்று பாராட்டு விழா

யாழ்ப்பாணம், செப். 28

மறுமலர்ச்சி எழுத்தாளர் பஞ்சாட்சர சர்மாவுக்கு பாராட்டு விழா ஒன்றை கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பரிபாலன சபையினர் நடத்துகின்றனர்.

இவ்விழா இன்று மாலை 6 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் இடம்பெறும்.

திரு. சு இராமலிங்கம் விழாவுக்கு தலைமை வகிப்பார். [ஒ]

மட்டக்களப்பு, அம்பாறையில்

## வீடுகளை இழந்த வறிய முஸ்லிம்களுக்கு புதியவீடுகள்கிடைக்கும்

அம்பாறை, செப். 28

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் வன்செயல்களின் போது பாதிக்கப்பட்டு வீடுவாசல்களை இழந்த வறியமுஸ்லிம்களுக்கு கொழும்பு தேசியகவுன்சில்வை. எம். எம்.ஏ இப்க்கம் வீடுகளை அமைத்துக் கொடுக்க இருக்கிறது.

தேசிய கவுன்சில் வை. எம்.எம்.ஏ. இயக்கப் புதிய தலைவர் ஜனுப் அக்பர் ஏ. கரீம் இது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சருடன் நேரில் கலந்து உரையாடி அமைச்சின் உதவியையும் கோரியுள்ளார்.

அவரது கோரிக்கையை புனர்வாழ்வு அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளதுடன் வீடமைப்புக்கென நிதிஉதவி வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இதன்படி ஒருவீட்டை அமைப்பதற்கு புனர்வாழ்வு அமைச்சு வழங்கும் தொகை போல் தேசிய கவுன்சில் சார்பிலும்அதேஅளவு தொகை வழங்கப்பட்டுவசதியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

மட்டக்களப்பு, - அம்பாறை மாவட்டங்களில், வன்செயல்களிஞல் பாதிக்கப்பட்டு குடியிருப்பு வீடுகளற்று இருக்கும் வறியமக்கள் பற்றிய விவரத்திரட்டுகளை உடன் தலைமையகத்திற்கு அனுப்பி வைக்குமாறு இந்த மாவட்டங்களிலுள்ள சகல வை. எம். எம். ஏ கிளைகளையும் தலைவர் ஜனுப். அக்பர் கரீம் கோரிக்கை விடுத்திருக்கிருர். (உ-14)

## பட்டிருப்பு பாலத்தில் போக்குவரத்து

மட்டக்களப்பு, செப். 28

பட்டிருப்பு பாலம்வழியாக வாகனப் போக்குவரத்துக்கள் தற்போது வழமைபோல்நடைபெறுகின்றன.

1986ஆம் ஆண்டு இப்பாலம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டது.

தற்போது பெருந்தெருக்கள் திணைக்களம் தற்காலிகப் பாலம் அமைத்து மீண்டும் போக்குவரத்து சேவையை சீர் செய்துள்ளது. (ஒ-21)

## இருப்பிடம் செல்ல உடன் ஏற்பாடு

தலைமன்ஞர், செப்.28

இந்தியாவில் அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்கள் தலைமன்ஞர்த் துறையை வந்தடைந்ததும் சிலமணி நேரத்துக்குள் தங்கள் இருப்பிடங்களுக்குச் செல்ல ஏற்பாடுகள்செய்யப்படுகின்றன.

இலங்கை-இந்திய சமாதானத்தைத் தொடர்ந்து தனியார் படகுகளின்மூலம் இந்தியாவில் அகதிகளாகஇருந்தஇலங்கைத் தமிழர்கள் அதிகமானேர் தலைமன்ஞர்த் துறையில் வந்து இறங்குகின்றனர்.

## இரண்டாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி மயூரதி சச்சிதானந்தன்**

சச்சிதானந்தன் கலைமகள் தம்பதிகளின் அருமைப் புதல்வி மயூரதி இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிருர். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, தம்பி அரிகரன், மாமாமார், அத்தைமார், ஜேர்மனியில் உள்ள சித்தப்பாமார், சித்திமார், அண்ணு, தம்பி, மச்சாள்மார், மச்சான்மார், சுருவிலைச்சேர்ந்த தாத்தா, அம்மம்மா, அத்தை, அன்ரிமார் மற்றும் மகாதேவன் மாமா குடும்பத்தினர் ஆகியோர் பல்கலைகளும் கற்று நீடூழி வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

''குமரன்குன்று''
சூராவத்தை.
சுன்ஞகம்.

28-9-1987. (1533)

## குட்டியப்புலத்தில் நகை, பணம் கொள்ளை

அச்சுவேலி, செப் 28

துப்பாக்கி, கத்தி, வாள் போன்ற ஆயுதங்களுடன் வீடுபுகுந்த ஒரு கோஷ்டியினர் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான நகை பணம் ஆகியவற்றைக் கொள்ளை அடித்துச் சென்றனர்.

செல்வநாயகபுரத்துக்கு அண்மையில் உள்ள குட்டியப் புலத்தில் திரு. எஸ். குழந்தைவேல் என்பவரின் வீட்டில் வியாழக் கிழமை இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

வீட்டில் இருந்தவர்களை அறையில் வைத்துப் பூட்டிவிட்டு கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டினராம்.

## சோதனை

வடமராட்சி, செப். 28

வல்வை தடை முகாமில் சில தினங்களாக இந்திய இராணுவத்தினர் சோதனையில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இச் சோதனை ஒரு முதற் கட்ட சோதனை என்றும், படிப் படியாக இது கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (ஒ-16)

## டிக்ஸிற் கருத்து

பலாலி, செப். 28

'ஓர் இளைஞர் தேவையற்ற விதத்தில் அநியாயமாக இறந்துள்ளார்'

விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. திலீபனின் மரணம் பற்றி கருத்து தெரிவிக்கையில் இந்திய உயர்ஸ்தானிகர் திரு ஜே என். டிக்ஸிற் மேற்கண்டவாறு கூறினுர்.

இந்தியா ஐந்து அம்சக் கோரிக்கைக்கான தீர்வையும் அதற்கான உத்தரவாதத்தையும் தாமதித்ததிஞல் இளம் தலைவர் ஒருவரை நாம் இழந்துள்ளது பற்றி உங்கள் கருத்தென்ன? என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு திரு டிக்ஸிற் மேற்கண்டவாறு பதில் அளித்தார்.

ஒரே ஒரு வார்த்தையில் மட்டும் கூற விரும்புகின்றேன்.

'இது ஒரு துக்ககரமான நிகழ்ச்சி' என்ருர் டிக்ஸிற்.

'இதுபற்றி மேலும் நான் கூறவிரும்பவில்லை' என்றும் அவர் சொன்ஞர். (இ-119)

## ஈழவர் முன்னணி அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க அரசியற் பிரிவு பொறுப்பாளர் திலீபனின் மரணச் செய்தி அறிந்து துயரடைகிருேம்.

ஈழவர் முன்னணி விடுத்த அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.


ஆயுதங்கள் ஒப்படைக்கப் பட்டுவிட்ட பின்னரும் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை உரிமைகளை முன்வைத்து 5 அம்சக் கோரிக்கை அடிப்படையில் சாத்வீகப் போராட்டத்தின் மூலம் உலகோரின் கவனத்தையும், அனுதாபத்தையும் பெற்றெடுக்க விளைந்து, அதற்காகத் தன் உயிரையே விலையாகக் கொடுத்த வீர மறவனுக்கு வீர அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்ளுகிருேம் என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

## ● இவர்கள் கல்லடி முகாமில்

தஞ்சம் புகுந்த புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ உறுப்பினர்கள் சகலரும் கல்லடி விசேட அதிரடிப் படை முகாமில் வைக்கப் படுள்ளார்கள்.

மேற்படி இயக்கங்களைச் சேர்ந்த 200 உறுப்பினர்கள் இவ்வாறு தஞ்சம் புகுந்தனர். [ஒ-21]

## நன்றி நல்கலும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு 9 . 12 . 1928 — உதிர்வு 31 . 8 . 1987

**A. R. அருட்சோதி**
(Retired Station Master)
வல்வெட்டித்துறை.

31-08-87இல் அமரத்துவம் எய்தினுர். அவர் சீதாதேவியின் அன்புக்கணவரும், அன்பழகன், பாலசூரியர் ஜீவருணி ஆகியோரின் அன்புத்தந்தையும், A. R. சிவகுரு, ஈஸ்வரலிங்கம், பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் R. அனந்தராசா, R. சக்திவேல் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்ஞரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டவர்கட்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பிய எல்லோருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வல்வை ஊரணி மடத்தில் 29-09-87 காலை நடக்கவிருக்கும் அந்தியேட்டி வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறும் அழைக்கின்ருேம்.

A School Lane, வல்வெட்டித்துறை. — மனைவி, மக்கள் உறவினர்

(1534)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 27 | 12 | 1946 — உதிர்வு 31 | 08 | 1987

**இரத்தினவடிவேல் - சக்திவேல்**

சிவபதமடைந்த இரத்தினவடிவேல் சக்திவேல் அவர்களின் அந்தியேட்டி கிரிகைகள் (30-09-1987) புதன்கிழமை அதிகாலை சாமிக்காடு இல்லத்தில் நடைபெறும். உறவினர்கள் நண்பர்கள் யாபேரையும் அன்ஞரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், சபிண்டீகரணக் கிரியைகளிலும், மத்திய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்ருேம்.

ஈமக்கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்தியை அனுப்பியவர்கட்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்ருேம்.

இப்படிக்கு
மனைவி, மகன், தாய்,
தந்தை, சகோதர, சகோதரிகள்.

(1525)

வீரவரலாறு படைத்து வீரசுவர்க்கம் அடைந்த

● வீரவேங்கை திலீபனுக்கு ●

எமது வீரவணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கின்ருேம்

★ பாலன் ஸ்ரோர்ஸ் ★

கே. கே. எஸ். ரேட், சுன்ஞகம்.

உரிமையாளர்:- மா. சின்னராசா

NATIONAL LIBRARY OF SRI LANKA NLSL 15/09/2023 11:03:44

**உதய சங்கற்பம்**

மரணபயம் இருக்கின்றவன் விடுதலையின் உயர்ந்த சுகத்தை அறிவதில்லை.

—ஸ்ரீமத் சுவாமி கெங்காதரானந்தா.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 21805
யாழ்ப்பாணம். 22072
28. 9. 1987 த. பெ. இல:- 23


## அமைதி பேணும் பண்பு தொடரட்டும்

தமிழர் நல்வாழ்வுக்காகத் தன்னை மரித்துக் கொண்ட தியாகத் தீபம் திலீபனின் மறைவு குறித்து தமிழ் மண் எங்கணும் துக்கம் அனுஷ்டிக்கப்படுகிறது. திலீபனின் பூதவுடல் குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. தமிழ்ப் பிரதேசம் சோபை இழந்து காணப்படுகிறது தமிழ் மக்கள் சோகமே உருவாக மாறி உள்ளார்கள்.

திலீபன் ஓர் ஆட்சித் தலைவனாக இருக்க வில்லை. தனது இயக்கத்தின் தலைவனாகவும் இருக்கவில்லை. ஓர் இலட்சியத்துக்காக உழைக்கும் தொண்டனாகப் பணிபுரிந்தான். அந்த இலட்சியத்துக்காக ஆயுதம் ஏந்திப் போராடும் வீரனாக இருந்தான். காலத்தோடு ஒட்டி மற்றவர்களைக் கொல்லும் ஆயுதத்தை கீழே வைத்தான் தான் பற்று வைத்த இலட்சியத்தை அடைய வேண்டும் என்ற நம்பிக்கையால் தன்னையே கொல்லும் உண்ணாவிரதம் என்னும் ஆயுதத்தை மன உறுதியுடன் ஏந்தினான். இலட்சிய வேள்வியில் தன்னைப் பொசுக்கிக்கொண்டு தியாகத்தின் சின்னமானான்.

ஈழத் தமிழர் வரலாற்றில் அகிம்சை வழி நின்று இலட்சியப் போராட்டத்தில் முதற் களப்பலியான செம்மல் அவன் சுடரின்றான். முப்பது வருடகால தமிழர் அரசியல் போராட்டத்தில் நீர் ஆகாரம் இன்றி உண்ணா நோன்பிருந்து தனது உயிரை அர்ப்பணித்த முதலாவது தமிழன் திலீபன் தான். ஏன், இந்தியாவில் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த பொட்டி ஸ்ரீராமுலுவும், அயர்லாந்து விடுதலை வீரன் பொபி சாண்டேஸும் கூட நீராகாரம் அருந்தியே தமது உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர்கள். ஆனால் திலீபன் நீராகாரமும் நல்லாமல் உண்ணாவிரதம் இருந்தான்.

கையாலே தூப்பாக்கியேந்திய அதேதிலீபனும் அகிம்சையை கைக்கொண்டு இலட்சியத்துக்காகத் தன்னைத் தானே அழிக்கும் மன உறுதியைப் பெற்றுவிருந்து. அது ஒன்றே அவனை மக்கள் தலைவர்களாக இருந்தவர்களுக்கும் மேலாக உயர்த்தியுட்டது.

தமிழ் மக்கள் அவ்வாறு அடாத செயல்களில் இறங்கியும் அமைதி காக்க வந்திருக்கும் இந்திய படைகள் கடமையாக நடந்து கொள்ளும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனல் தமிழ் மக்கள் தாம் விடுதலை விரும்பும் மக்களே அன்றி வன்செயல் விரும்பும் மக்கள் அல்லர் என கடந்த இரண்டு நாட்களாக நிருபித்து விட்டனர். திலீபனின் மறைவுக்கான துக்க அனுஷ்டிப்பின் போது பூதவுடல் ஊர்வலத்தின் போ... அசம்பாவிதம் எதுவும் ஈடுபடாது அமைதி காத்து விட்டார்கள்.

அந்தநிலை தொடர வேண்டும். விடுதலை வேறு; உரிமைப் போராட்டம் வேறு; வன்செயல் வேறு. மூன்றாவது முந்திய இரண்டுக்கும் விரோதி போன்றது. இதனைப்புரியாமல் உணர்ந்து அமைதியைப் பேண வேண்டும். வன்செயல் புரிந்து எமது பகுதியில் சொத்துக்களை அழிப்பதனால் யாருக்கு நஷ்டம்? எமக்குத் தான்!

எமது பிரதேசத்தை, சொத்துக்களை, மக்களை, உடைமைகளை ஸ்ரீலங்கா இராணுவம் அழித்த போது, நாம் கண்டித்தோம்; கவலைப் பட்டோம், அவர்களை தடுத்து நிறுத்துவார் எவருமில்லையா என்று ஏங்கினோம்.

அவ்வாறு கண்டித்த, கவலை அடைந்த நாமே எமது சொத்துக்களை அழித்துக் கொள்ள முயன்றால் அதனை என்னவென்பது? யாரிடம் போய் முறையிடுவது?

எங்கள் நாட்டை, நாமே அழிக்கக் கங்கணம் கட்டினால் அதற்குப் பெயர் ஒருபோதும் விடுதலை வேட்கை ஆகாது.

தேச விடுதலைக்காக போராடுவோர் தேசத்தை அழிக்க அல்லது சேதப்படுத்த முனைவது எப்படி நியாயப்படுத்துவது? அது தேச பக்திக்குப் பதில் தேச விரோதமாகிவிடும் குளிக்கப் போய் சேறு பூசிக் கொள்வதாகும்.

எனவே தமிழ்மக்கள் எந்தக் கட்டத்திலும் வன்செயல்களில் ஈடுபட நினைக்கக்கூடாது. திலீபனின் துக்க அனுஷ்டிப்பின் போது காட்டப்படும் அமைதி பேணும் மரபு தொடர வேண்டும். அது எமது விடுதலைக்கு அவசியம். எமது உரிமைப் போராட்டத்துக்கு உரம் ஊட்ட வல்லதும் அதுவே.

ஆகவே மக்களே! எவர் தூண்டினாலும், எந்தக்கட்டத்திலும் இனிமேல் வன்செயலில் ஈடுபடவேயில்லை என்று இப்போதே சங்கற்பம் கொள்ளுங்கள்.

அமைதி அறங்காக்கும். பொறுமைபொன்னானது. பொறுத்தார் நாடாள்வார், பொங்கினர் காடாள்வார் என்ற முதுமொழி அர்த்த புஷ்டியானது. அதை மறந்து விடாதீர்கள்.

## கொமேனி றேகன் சந்திப்பு சாத்தியமா?

வாஷிங்டன், செப் 28

வளைகுடாவில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டால் ஈரானின் ஆத்மீகத் தலைவர் ஆயதுல்லா கோமேனியைச் சந்திக்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க அதிபர் றேகன் தெரிவித்தார்.

'யுஎஸ் நியூஸ் அன்ட் வேர்ல்ட் றிப்போர்ட்' சஞ்சிகைக்கு அளித்தளிபேட்டியில் அதிபர் றேகன் இத்தகவலை வெளியிட்டார். (இ-எ)

## றிசேர்வ் பொலீஸ்: இந்தியாவின் மறுப்பு

புதுடில்லி, செப். 27

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்களை நிர்வகிக்கவே இந்திய மத்திய பொலீஸ் றிசேர்வ் படை அனுப்பப்பட்டுள்ளது என்ற செய்தியை புதுடில்லி அரசு மறுத்துள்ளது.

இத் தகவலை புதுடில்லி அரசு அதிகாரி ஒருவர் நேற்று வெளியிட்டார்.

இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் அமைதிப் படையுடன் சேர்ந்து பணி புரியவே மத்திய றிசேர்வ் பொலீஸ் படை இலங்கைக்கு அனுப்பப் பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (உ-எ)

## அமெரி; வியட் உடன்பாடு

வாஷிங்டன், செப். 27

வியட்நாம் யுத்தத்தின் போது காணாமல் போன அமெரிக்கத் துருப்புக்களைக் கண்டு பிடிப்பது சம்பந்தமாக உடன்பாடு ஒன்றை வியட்நாமும், அமெரிக்காவும் செய்து கொண்டுள்ளன.

மனிதாபிமான உதவிகளை வியட்நாமுக்கு வழங்க அமெரிக்கத் தொண்டர் ஸ்தாபனங்களை அனுமதிப்பதன் மூலம், காணாமல் போன அமெரிக்கத் துருப்புக்கள் பற்றிய விவரங்களை வியட்நாமிடமிருந்து அமெரிக்கா பெற்றுக் கொள்ள இந்த உடன்பாடு இடமளிக்கின்றது. (இ-எ)

# அமெரிக்காவை சீண்டுகிறது ஈரான்

தெஹ்ரான், செப்.27

அமெரிக்காவைத் திருப்பித் தாக்கும் உரிமை தனக்கு உண்டு என்று ஈரான் நேற்று அறிவித்தது.

கடலில் கண்ணிவெடிகளைப் போடும் போது ஈரானிய பீரங்கிப்படகு ஒன்றை அமெரிக்கக் கடற்படை ஹெலிக்கொப்டர் தாக்கியது அல்லவா!

அது தொடர்பாகவே அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்கும் உரிமை தனக்கு உண்டு என்று ஈரான் தெரிவித்து இருக்கின்றது.

சேதமடைந்த ஈரானிய படகு பின்னர் அமெரிக்கக் கடற்படையினால் மூழ்கடிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் 3 ஈரானிய வீரர்கள் உயிரிழந்தனர்: 26 பேர் உயிர்தப்பினர். உயிர் தப்பியவர்களையும், இறந்தவர்களின் சடலங்களையும் அமெரிக்கா, ஓமானில் உள்ள ஈரானிய அதிகாரியிடம் ஒப்படைத்திருந்தது.

இதனிடையில் ஈரானும் ஈராக்கும் மீண்டும் பரஸ்பரம்தாக்குதல்களை ஆரம்பித்து உள்ளன. (உ-எ)

## குண்டு வெடிப்பில் நால்வர் பலி!

புதுடில்லி, செப். 27

குஜராத் மாநிலத்தில் ராஜ்கோட்டிற்கு அருகில் குண்டு ஒன்று வெடித்ததில் 4பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (உ-எ)

# உகண்டா நாட்டவர் கென்யாவில் தஞ்சம்

கம்பாலா, செப். 27

இரண்டாயிரத்துக்கு அதிகமான உகண்டா நாட்டவர், கென்யாவில் தஞ்சமடைந்துள்ளனர்.

உகண்டாவில் அரசுப் படைகளுக்கும் கிளர்ச்சிப் படைகளுக்கும் இடையே சண்டைகள் தீவிரமடைந்து வருகின்றன.

இதைத் தொடர்ந்தே உகண்டாப் பிரஜைகள் நாட்டை விட்டு கென்யாவுக்குள் ஓடுகின்றனர்.

தஞ்சமடைந்தவர்கள் இரு கிராமங்களில் முகாம்களில் வைக்கப் பட்டுள்ளனர் என்று கென்யா அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (உ-எ)

## பெனாஸிர் லாகூரில்

லாகூர், செப். 27

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோ, லாகூருக்கு பதினைந்து மாதகால இடைவெளிக்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை விஜயம் செய்தார்.

அப்போது மக்கள் குதூகல வரவேற்பளித்தனர். [உ-எ]

**வெளி உலகில்**

# சுவாவில் வெடி குண்டு இரண்டு பேர் பலி!

சுவா, செப். 27

பிஜி தலைநகர் சுவாவில் கடந்த சனிக்கிழமை காரில் வைக்கப் பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் இரண்டு பேர் கொல்லப்பட்டனர்.

யார் இறந்தனர்? எப்படி இவ் வெடி விபத்து இடம்பெற்றது? - போன்ற தகவல்களை வெளியிட இராணுவ அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

இதனிடையில் உயர் நீதிமன்ற நீதியரசர் ஒருவரும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

இதனையடுத்து பிஜி உயர் நீதிமன்ற நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பித்து விட்டன.

இந்த நிலையில் நாட்டின் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை வழமைக்குக் கொண்டுவர இராணுவத் தளபதி ரபுக்கா, உயர் மட்ட சிவில் அதிகாரிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித் திருக்கின்றார்.

ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒருவரை பிஜி இராணுவத்தினர் தடுத்து வைத்து விசாரித்த பின்னர் விடுவித்தனர்.

ஆனால் அவர் விடுவிக்கப்பட்ட தகவலை ஆஸ்திரேலிய அதிகாரிகள் ஊர்ஜிதம் செய்யவில்லை. (உ-எ)

# ஏழு மதவாதிகளுக்கு மரண தண்டனை!

ருனிஸ், செப். 27

ருனிஸியாவில் இஸ்லாமிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்ட ஏழுமதத்தீவிரவாதிகளுக்கு இராணுவ நீதிமன்றம் ஒன்று மரண தண்டனை விதித்துள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் இவர்கள்மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள்மீது இன்னும் 19 பேர்மீது இராணுவ நீதிமன்றத்தினால் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (உ-எ)

## மோதலில் 8 பேர் பலி

ஜோஹன்னர்ஸ் பேர்க், செப், 27

தென் ஆபிரிக்கக் கிராமம் ஒன்றில் நடந்த மோதலில் 8 கறுப்பு இனத்தவர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கூட்டம் நடந்துகொண்டிருந்த வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றின் போதே இந்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது. (உ-எ)

## பிரெஞ்சு - ஆஸி அமைச்சர்கள் சந்திப்பு

வாஷிங்டன், செப், 27

இந்த ஆண்டில் முதல் தடவையாக பிரெஞ்சு, ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர்கள் கடந்த வாரம் வாஷிங்டனில் சந்தித்துக் கொண்டனர்.

தென் பசுபிக்தீவுகளில் ஒன்றான நியு கலிபோனியாவின் சுதந்திரம், தென்பசுபிக் பிராந்தியத்தில் அணு ஆயுத பரிசோதனை நடத்துவது ஆகியன குறித்து இவர்களின் பேச்சுக்கள் அமைந்தன. (உ-எ)

# பிஜித்தீவு குடியரசாகும்

## புரட்சியாளர் அறிவிப்பு

பிஜி, அடுத்த மாதம் குடியரசாகப் பிரகடனப் படுத்தப்படும்.

ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத் தளபதி கேர்ணல் சித்திவெனி ரபுக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

குடியரசாகப் பிரகடனப்படுத்துவதன் மூலம் மட்டுமே பிஜியில் பழங்குடி மக்களின் ஆட்சி அதிகாரத்தை உறுதிப் படுத்த முடியும் என்றும் கேர்னல் ரபுக்கா தெரிவித்தார்.

இராணுவப் புரட்சியை நடத்தி ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர் ரபுக்கா ஆஸ்திரேலிய பத்திரிகையாளர் ஒருவருக்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்ட தகவல் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த வேறு தகவல்கள் வருமாறு;

- புதிய அமைச்சரவை திங்கள் வெளியிடப்படும்.
- முன்னாள் பிரதமர் டாக்டர் பவித்திரா உட்பட, முதல் புரட்சியில் பதவி கவிழ்க்கப்பட்ட அமைச்சரவையில் இருந்த 9 பேர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
- கவர்னர் ஜெனரல் கைது செய்யப்படவில்லை; அவரின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன.
- இரவு நேர ஊரடங்குச் சட்டம் இன்னும் ஒரு வாரத்தில் நீக்கப் படலாம். [உ-எ]

## கிளர்ச்சி தீவிரமாகும்

மூன்று எதிர்க்கட்சிக் கூட்டணிகள் பங்களாதேஷ் அரசுக்கு எதிராகத் தங்கள் கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தி உள்ளன.

வெள்ள நிவாரணப் பணிகளில் அரசு அதிகாரிகள் ஊழல் புரிந்து வருவதாகக் குற்றஞ்சாட்டி இக்கிளர்ச்சி நடத்தப்படுகின்றது. (உ-எ)

## தளர்த்தும் முயற்சி

மாஸ்கோ, செப். 27

கொள்கைக் கருத்து வேறுபாடு கொண்டவர்கள்மீதுகடும்நடவடிக்கை எடுப்பதைத் தளர்த்தும் முயற்சியில் சோவியத் யூனியன் ஈடுபட்டுள்ளது.

இதுசம்பந்தமான சட்டக்கோவையில் தேவையான திருத்தங்களைச் செய்வதில் சோவியத் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இராஜ தந்திர வட்டாரங்களை ஆதாரம் காட்டி பீ. பி. சியின் மாஸ்கோ செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டார்.

## காந்தியின்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலைப் புலிகள் மகாத்மாகாந்தியின் சாத்வீக சத்தியாக்கிரகப் போரில் தம்மை ஈடுபடுத்தியுள்ளார்கள். ஆட்பலத்தை விட ஆத்மபலமே மேலானது என்ற தத்துவத்தை தமக்கு விட்டுச் சென்றவர் காந்திஜி. அவரது அகிம்சை வழியில் முதற் களப்பலியாக தன்னை அர்ப்பணித்தார் இராசையா பார்த்தீபன் ''திலீபன்'' அவர்கள்

சுகபோகத்துடன் வாழவேண்டிய வயதில் அவர் தமிழ் மண்ணின் மீட்சிக்காகத் தன்னையே மெழுகுவர்தியாக்கியிருப்பதை இன்று நம் கண்களால் கண்டோம். நமது மண்ணில் இப்படி ஒரு நிகழ்ச்சி முன்னெப்பொழுதும் நடந்ததில்லை.

எழுச்சி பெற்ற தமிழ் மக்கள் தமிழ்மண்ணைக் காப்பதற்கு மண்ணின் விடுதலையைக் காண்பதற்கு தம்மை தயார் செய்ய வேண்டாமா?

## வரலாறு - - -

(3ஆம்பக்கத்தொடர்ச்சி)

டைய கௌரவத்தைப் பாதுகாக்கக் கூடிய செயல் அல்ல.

நமது மக்களின் ஒரு தலைமுறை அழிந்து ஒழிவதை இந்தியா பார்த்துக்கொண்டிராமல் உடனடியாகச் செயற்பட வேண்டும். ஒப்பந்தத்துக்கு நமது மக்கள் மதிப்புக்கொடுத்தது போல இந்தியாவும் மதிப்புக் கொடுக்கவேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

**அடிப்படை உரிமை மீறல்:**

# தமிழர் தொடர்ந்த வழக்கில் நஷ்டஈடு வழங்கவேண்டுமென அரசுக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, செப். 27

அடிப்படை உரிமையைமீறி அரசு நடந்து கொண்டதாக மலையகத் தமிழர் ஒருவர் செய்த விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது.

முறைப்பாட்டுக்காரருக்கு 3 ஆயிரம் ரூபா நஷ்ட ஈடு வழங்கும் படியும் உயர் நீதி மன்றம் அரசுக்கு உத்தரவிட்டது.

ஹட்டனைச் சேர்ந்த முத்துவீரன் நடசிவாயம் என்பவர் உயர் நீதி மன்றத்துக்குச் செய்த முறைப்பாட்டில் தெரிவித்திருந்ததாவது;

28 - 7 - 86 இல் இ. போ. ச. பஸ் ஒன்றில் நான் நாவலப்பிட்டிக்குச் சென்று கொண்டிருந்தேன்.

அச் சமயம் மூன்றாவது எதிர் மனுதாரரான சார்ஜன்ட் நாஜிபுதீன் என்னைக் கைது செய்தார். கைது செய்வதற்கான காரணத்தை அவர் எனக்கு அப்போது தெரிவிக்க வில்லை.

ஆகஸ்ட் 4 ஆம் திகதி வரை பாதுகாப்புப்படை முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப் பட்டிருந்தேன்.

அக் காலத்தில் 3ஆவது எதிர் மனுதாரரினாலும் மற்றும் பாதுகாப்புப் படையினராலும் தாக்கப்பட்டேன். விசாரணையின் போது என்னைப் பயங்கரவாதி என்று வர்ணித்தனர். நான் அதை மறுத்தேன்.

பயங்கரவாதி என்று ஒப்புக்கொண்டு கையொப்பமிடும் வரை என்னைத் தாக்கினார்கள். பின்னர் ஹட்டன் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றார்கள். பின்னர் இரண்டாவது எதிர் மனுதாரரான பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் முன் நிறுத்தினர்.

இனியும் தாக்குதலைத் தாங்க முடியாது என்று பொலீஸார் கூறியபடி வாக்குமூலம் ஒன்றைக் கொடுத்தேன். அப்படிக் கொடுத்தால் விடுதலை செய்யப்படுவேன் என்ற உறுதி மொழியைப் பொலீஸார் நிறைவேற்றவில்லை.

தொடர்ந்தும் அவரை சட்டவிரோதமாக தடுப்புக்காவலில் வைத்தார்கள். பின்னர் மாஜிஸ்தி

(6ஆம் பக்கம் பார்க்க)

**நவராத்திரி சிறப்பம்சம்**

## திருமகள் வாழ்த்து

பொன்னிலும் மணிகளிலும் — நறும்
பூவிலும் சாந்திலும் விளக்கினிலும்
கன்னியர் நகைப்பினிலும் — செழுங்
காட்டிலும் பொழிலிலும் கழனியிலும்
முன்னிய துணிவினிலும் — மன்னர்
முகத்திலும் வாழ்ந்திடும் திருமகளைப்
பன்னிநற் புகழ்பாடி — அவள்
பதமலர் வாழ்த்திநற் பதம்பெறுவோம்

வெற்றி கொள் படையினிலும் - பல
விநயங்கள் அறிந்தவர் கடையினிலும்,
நற்றவ நடையினிலும் - நல்ல
நாவலர் தேமொழித் தொடரினிலும்,
உற்றசெந் திருத்தாயை - நித்தம்
உவகையிற் போற்றியிங் குயர்ந்திடுவோம்;
கற்றபல் கலைகளெல்லாம் - அவள்
கருணை நல்லொளிபெறக் கலிதவிர்ப்போம்.

—பாரதியார்

# திலீபனுக்கு அமைப்புக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், செப். 28

விடுதலை வேங்கை திலீபனுக்கு அஞ்சலி செலுத்தி பல்வேறு அமைப்புக்களும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன.

தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

**தமிழர்ஆசிரியர் சங்கம்**

தமிழீழத்தின் விடுதலைக்காக வீரவேங்கை திலீபன் ஐந்து கோரிக்கைகளை இந்திய அரசின் முன்வைத்து உண்ணாவிரதமிருந்து உயிரைத் தியாகம் செய்தமை தமிழீழத்தின் விடுதலை வரலாற்றில் ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

திலீபனின் அகிம்சை ரீதியிலான போராட்டத்திற்குத் தமிழ்ச் சமுதாயம் தலை வணங்குகின்றது என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளரால் வெளியிடப்பட்ட அஞ்சலிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்தியில் ஒரு நல்லாசிரியன் பெற்ற புதல்வனின் உயிர்த் தியாகத்தால் ஆசிரிய சமுதாயம் பெருமை அடைகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**யாழ் மாவட்ட சனசமூக நிலைய ஒன்றியம்**

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உண்ணாவிரதமிருந்து தனதுயிரை மாய்த்த வீர வேங்கை இ. திலீபனின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக யாழ் மாவட்டத்திலுள்ள சகல சனசமூக நிலையங்களும் தமது நிலையக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறு யாழ் மாவட்டச் சனசமூக நிலையங்களின் ஒன்றியப் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அஞ்சலிச் செய்தியில் காந்தீயத்தின் மேலான வழி நின்று தமிழீழ விடுதலைக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த தியாக வேங்கை அமரர் திலீபன் தமிழினத்தின் தன்மானம் காக்கப் புறப்பட்ட மாவீரன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்**

விடுதலைப் போராளி திலீபனின் மறைவையொட்டி யாழ் உதைபந்தாட்டச் சங்கம் [லீக்] தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் தெரிவித்துக்கொள்கிறது,

அறிவும், அடக்கமும், பண்பும் கொண்ட திலீபன் போன்ற ஓர் உன்னத போராளியின் இழப்பு தமிழ் மக்களுக்குக் குறிப்பாக விடுதலைப் புலிகளுக்கு ஈடுசெய்யப் பட முடியாத ஓர் இழப்பாகும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திறம் விபூதி, பச்சைச்சந்தனம், மைசூர்ச்சந்தனம், No. 1 குங்குமப்பூ, ஆயுள்வேத மருந்துகள், மருந்துச்சரக்குகள், வாசனைத் திரவியங்கள் போன்ற சகல பொருள்களையும் உங்கள் திருப்திக்கேற்ற வகையில் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 5 (76), பெரியகடை,
யாழ்ப்பாணம்.

# உதயன்

28-09-1987 திங்கட்கிழமை

- அபிஷேகப் பொருள்கள்
- புதுமனை அத்திவாரப் பொருள்கள்
- நாள் சரக்குகள்
- விவாக முகூர்த்தப்பொருள்கள்
- கோவில் சங்காபிஷேகப் பொருள்கள்
- கும்பாபிஷேகப் பொருள்கள்
- அஷ்டபந்தன மருந்து

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

# தியாகி திலீபனின் பூதவுடலுக்கு வடமராட்சியில் கண்ணீரஞ்சலி

வடமராட்சி, செப் 28
வடமராட்சி எங்கும் திலீபனின் பூதவுடலுக்கு நேற்று கண்ணீர் அஞ்சலி செலுத்தப்பட்டது. சனிக்கிழமை காலை வீரசுவர்க்கம் எய்திய திலீபனின் பூதவுடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக நேற்று காலை கோப்பாய், அச்சுவேலி, உடுப்பிட்டி ஊடாக வடமராட்சிக்கு வந்து சேர்ந்தது.

திலீபனின் பூதவுடலைத் தரிசித்து அஞ்சலி செலுத்துவதற்காக பல லாரிகள் கணக்கான பொதுமக்கள் நேற்று அதிகாலையிலேயே வல்வெட்டித் துறைப்பகுதியில் வந்து கூடி நின்றனர்.

புலிகளின் இராணுவ மரியாதையுடன் பாண்ட் வாத்தியம் சகிதம் பூதவுடல் வல்வையை வந்தடைந்த போது அங்கு கூடியிருந்த மக்கள் பலரும் வாய்விட்டுக் கதறினர்.

பூதவுடல் வந்த வாகனத்தின் முன்னும் பின்னும் புலிகள் பிரமுகர்கள் சென்றனர்.

வல்வெட்டித் துறை எங்கும் வாழை, தென்னோலைத் தோரணங்களும் கட்டி பந்தல்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்தன.

வல்வைக்கு எடுத்து வரப்பட்ட பூதவுடல் பின்னர் பொலிகண்டி, திக்கம், இன்பருட்டி, வியாபாரிமூலை, பருத்தித்துறை, புலோலி, மந்திகை, மாலிசந்தி நெல்லியடி, துன்னாலை உபயகிராமம், வல்லிபுரக் கோவில், நாகர்கோவில் அம்பன் குடத்தனை, ஆழியவளை, உடுத்துறை போன்ற இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

திலீபனின் பூத உடல் கொண்டு செல்லப்பட்ட போது வழி நெடுகிலும் சோகக்கீதங்களும் ஒலித்தன. (உ-160)

## வர்த்தகர்கள் புகழாரம்

யாழ்ப்பாணம், செப் 28
தமிழ் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளரான பெரும் பொறுப்பை வகித்து வந்த போராளி ம. திலீபனின் மறைவு யாழ் வர்த்தக சமூகத்திற்கு அளப்பரிய பாரிய இழப்பாகும். மக்களின் நன்மையை கருதி அவர் செய்த பணிகளை நினைவு கூருகின்றோம் என யாழ் வர்த்தகர் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு வயதிலேயே இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு முன்னின்று உழைத்த திலீபன் தமிழினத்துக்கு பெருமை சேர்த்துள்ளார்.

திலீபனின் இழப்பு வர்த்தகர்களாகிய எமக்கு ஈடுசெய்ய முடியாததொன்றாகும். இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## ஹர்த்தால் அனுஷ்டிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 28
மறைந்த தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இன்று யாழ் குடாநாடெங்கிலும் ஏனைய இடங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு விடுதலைப்புலிகள் கோரியிருக்கின்றனர். (உ)

## உண்ணாவிரதம் தொடரும்

வடமராட்சி, செப் 28
வல்வையில் உண்ணாவிரதம் இருந்து வரும் விடுதலைப் புலிகளின் ஐந்து அம்சத் திட்டம் நிறைவேறும் வரை தமது உண்ணா விரதத்தைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளனர்.

# சமாதானப் படையினர் இந்திய நோட்டுகளை வைத்திருக்க முடியாது

பலாலி, செப். 28
இந்திய இராணுவத்தினர் இலங்கைக்குள் இந்தியப் பணத்தினை வைத்திருக்கவோ பயன்படுத்தவோ கூடாது என்ற கட்டுப்பாட்டினை இந்திய அரசு, இலங்கையில் உள்ள தனது சமாதானப்படைத் தலைமையகத்திற்கு அறிவித்துள்ளதாக நம்பகரமாகத் தெரியவந்துள்ளது.

இங்குள்ள இந்தியப் படையினருக்கு அவர்களது சம்பளப் பணத்தினைத் தேவைக்கேற்ப இலங்கைப் பணத்தில் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் பகுதி முழுவதும் சோகத்தில் மூழ்கியது

யாழ்ப்பாணம், செப். 28
திலீபனின் மறைவையொட்டி யாழ்குடாநாடு போன்று முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலும் நேற்று முழு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிராமங்கள் தோறும் அஞ்சலி மேடைகள் அமைக்கப்பட்டிருந்தன. கறுப்புக் கொடிகளும் தோரணங்களும் வீதி வெங்கும் கட்டப்பட்டிருந்தன.

அரச அலுவலகங்கள், தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள் ஏதும் இயங்கவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலும் திலீபனின் மறைவையொட்டி துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

திலீபனின் மறைவினால் தமிழ்ப்பிரதேசம் எங்கும் சோகத்தில் மூழ்கியிருப்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## நஷ்டஈடு

திருமலை — ஹபரணை வீதியில் கிழக்கு மாகாணத்தில் உயிரிழந்த பொதுமக்களின் குடும்பங்களுக்கு தலா 75 ஆயிரம் ரூபா வீதம் நட்டஈடு வழங்கப்பட்டது

## நான் இறப்பது உறுதி:

# இறந்தபின் என் கண்ணை ஒரு தமிழ் மகனுக்கு அளியுங்கள்

### மட்டக்களப்பு மதன் உணர்ச்சி உரை

யாழ்ப்பாணம், செப்.28
நான் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் இறப்பது உறுதி

நான் இறந்ததும் எனது கண்கள் பழுதடையாது இருந்தால் அவற்றைத் தமிழ்பேசும் மான் ஒருவனுக்கு கொடுங்கள்.

—இவ்வாறு மட்டக்களப்பில் உண்ணாவிரதம் நடத்திவரும் மதன் ஞாயிற்றுக் கிழமை பொதுமக்கள் மத்தியில் உணர்ச்சியாக உரையாற்றுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:–

உண்ணாவிரதத்தில் நான் உறுதியாக இருக்கிறேன், மரணம் தான் முடிவென்பதும், நான் இறப்பதால் மக்களுக்கு விடிவு ஏற்படும் என்பதும் எனக்குத் தெரியும்

என் உயிர் இவ்வுலகை விட்டு பிரிந்தாலும், என் உடம்பு இந்த மண்ணில் இருந்து மறைந்தாலும், என் இரண்டு கண்களால் தமிழீழத்தைப் பார்க்க நான் விரும்புகின்றேன்.

ஆகையால் நான் இறக்கும் போது எனது கண்கள் பழுதடையாது இருந்தால் அதனை எடுத்து ஒரு தமிழ் மகனுக்கு அளியுங்கள்.

மூஸ்லிமாக இருந்தாலென்ன தமிழராக இருந்தாலென்ன தமிழ்பேசும் ஒருவருக்கு அதைக் கொடுக்கவேண்டும். இது தான் எனது கடைசி ஆசை—இவ்வாறு அவர் தெரிவித்தார். (உ-10)

## ஈழ விடுதலை முன்னணியின் வேண்டுகோள்

தமிழர் பிரச்சினையில் அரும் பணியாற்றும் இந்தியாவைக் குறை கூறி, அதற்குத் தர்மசங்கடத்தைத் தோற்றுவித்தால் தமிழர்களுக்கு எதிர் காலமே இல்லை.

ஈழ- விடுதலை முன்னணி இப்படி வேண்டுகோள் விடுத்துள்ளது.

# போராட்டத்தை...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது.வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலி கொடுத்து ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலை குனியவைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

**யாருக்காக இறந்தான்**

திலீபன் உங்களுக்காக இறந்தான், உங்கள் உரிமைக்காக இறந்தான், உங்கள் மண்ணுக்காக இறந்தான். உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் சுதந்திரத்திற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த,உன்னத தியாகத்தைச் செய்யமுடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால் உயிரினும் உன்னதமானது எமது உரிமை. எமது சுதந்திரம். எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதி வாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்து செத்துக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால் நான் திலீபனை ஒருசாதாரண மனிதப் பிறவியாக பார்க்கவில்லை தன்னை எரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன், அதில் நான் பெருமை கொண்டேன்.

இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக்கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை, காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

**உண்மையில் நடந்தது என்ன?**

திலீபனின் மரணம் குறித்து இந்தியா ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கின்றது. இது அர்த்தமற்ற சாவு என இந்திய தூதர் கூறியிருக்கின்றார். தமது உறுதி மொழிகளை நம்பியிருந்தால் திலீபன் உயிர் தப்பியிருப்பான் என்று சொல்லியிருக்கின்றார்.

ஆனால் உண்மையில் நடந்தது என்ன, நடந்து கொண்டிருப்பது என்ன என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

எமது உரிமைகள் வழங்கப்படும். எமது மக்களுக்கும், எமது மண்ணுக்கும் பாதுகாப்பு அளிக்கப்படும், தமிழ் மக்கள் தமது பாரம்பரிய தாய்ப் பூமியில் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு அளிக்கப்படும் – இப்படியெல்லாம் பாரத அரசு எமக்கு அளித்த வாக்குறுதிகளை நம்பி நாம் எமது ஆயுதங்களைக் கையளித்தோம் எமது மக்களினதும், மண்ணினதும்பாதுகாப்பை இந்தியாவுக்கு பொறுப்பளித்தோம்.

இதனையடுத்து என்ன நடைபெற்றது என்பதெல்லாம் எனது மக்களாகிய உங்களுக்கு தெரியும்.

சிங்களக் குடியேற்றம் துரிதகெதியில் தமிழ் மண்ணை கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலீஸ் நிர்வாகம் தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது. அவசர அவசரமாக சிங்கள இனவாத அரசயந்திரம்.

தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில் சமாதானப் படையின் அனுசரணையுடன் சிங்கள அரச ஆதிக்கம் தமிழீழத்தில் நிலை கொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்துகொண்ட திலீபன் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி காண திடசங்கற்பம் கொண்டான்.

சிங்கள அரசுடன் உரிமைகோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது இனப் பிரச்சினையில் தலையிட்டது. பாரதம்தான் எமது மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளித்தது, பாரதம்தான் எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது. பாரதம் தான் எமது ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி வைத்தது ஆகவே. பாரத அரசிடம்தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும் எனவேதான் பாரதத்துடன் தர்மயுத்தம்ஒன்றை தொடுத்தான் திலீபன். அத்தோடு பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அஹிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக்கொண்டான்.

நீராகாரம்கூட அருந்தாது மரண நோன்பை திலீபன் தழுவிக்கொள்வதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னரே நாம் இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்கு முன்னறிவித்தல்கொடுத்தோம். உண்ணாவிரதம் ஆரம்பமாகி எட்டு நாட்கள் வரை ஒன்றும் நடைபெறவில்லை. பதிலுக்கு இந்திய அரச ஆதிக்கத்தின் கீழுள்ள தொடர்பு சாதனங்கள் குறிப்பாக அகில இந்திய வானொலி எம் மீது விசமத்தனமான பொய்ப் பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டது. திலீபனின் உண்ணாவிரதத்தை மிகவும் கேவலமாக கொச்சைப்படுத்தியது.

ஒன்பதாவது நாள் இந்தியத் தூதர் இங்கு வந்தார். உருப்படியில்லாத உறுதிமொழிகளைத் தந்தார்.

''வெறும் உறுதி மொழிகளை நம்பி எமது இனம் காலம்காலமாக ஏமாற்றப்பட்டு வருகிறது உருப்படியான திட்டங்களை முன்வையுங்கள். எமது கோரிக்கைகளை நிறைவேற்றி வையுங்கள் அதுவரை உண்ணாவிரதம் கைவிடப்படமாட்டாது'' என்றேன். உங்களுக்கு திலீபனது உயிரில் அக்கறை இருந்தால், நீங்கள் அவனை வந்து பாருங்கள். எமது மக்களுக்கு முன்பாக அவனிடம் உறுதிமொழிகளைக் கூறுங்கள். நாம் உண்ணாவிரதத்தை வாபஸ் பெறுகிறோம் என்றேன் அதற்கு இந்தியத் தூதர் மறுத்துவிட்டார்.

இந்திய அரசு எமது நியாயமான கோரிக்கைகளைப் புரிந்து காலம் தாழ்த்தாது உருப்படியான நடவடிக்கைகளை எடுத்திருந்தால் திலீபன் உயிர் பிழைத்திருப்பான் இன்னமும் இந்தியஅரசு எமது கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்தி வருகிறது.

நாம் கேட்டுக்கொண்டபடி ஒரு இடைக்கால அரசை நிறுவி இன்று எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் சிரத்தை காட்டுவதை விடுத்து எமக்கு நிபந்தனைகளை விதிக்கிறது. எம்மோடு கலந்தாலோசிக்காத ஒரு ஒப்பந்தத்திற்கு எமது அங்கீகாரம் கேட்கிறது. இப்போதும் ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி பேசுகிறது. போராட்டத்தை கைவிடச் சொல்கிறது - என்றார்.

# புலிகளின் விளக்கம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நடைபெற்ற பேச்சின் போது. திரு. டிக்ஸிற் புலிகள் தலைவரிடம் சில விளக்கங்களைக் கேட்டார்

அதனைத்தொடர்ந்து— வெளிமாவட்டங்களில் உள்ள புலிகள் இயக்கப் பொறுப்பாளர்கள் நேற்றுக்காலை இந்திய ஹெலிக்கொப்டர்களில் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுடன் கலந்தாலோசிக்க பின்னர் புலிகள் தலைவர் எழுத்து மூலமான விளக்கங்கள், ஆலோசனைகள் என்பன. திரு. டிக்ஸிற்றிடம் கையளிக்கப்படுவதற்காக இந்திய இராணுவ அதிகாரிகளிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது.

நேற்று மாலை சுமார் 4.45 மணியளவில் விடுதலைப் புலிகளிடமிருந்து எழுத்துமூலமாக விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக மேஜர் பெரியசாமி, மேஜர் ஜெனரல் பெர்ணண்டஸ் ஆகிய இருவரும் ஹெலிக்கொப்டர் மூலம் யாழ். பல்கலைக்கழகமைதானத்தில் வந்திறங்கினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்ரன் பாலசிங்கம் எழுத்துமூலமான இந்த விளக்கங்களை இந்திய அதிகாரிகளிடம் கையளித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால அரசில் பெரும் பங்கு வேண்டும். இடைக்கால அரசின் ஆட்சி அதிகாரம் எப்படி அமையவேண்டும். இவை பற்றியும் அந்த அறிக்கையில் விளக்கம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறிய வருகிறது.

விடுதலைப் புலிகளின் விளக்கங்களை திரு. டிக்ஸிற் இந்திய உயரதிகாரிகளாலும், ஸ்ரீ லங்கா உயரதிகாரிகளினுடனும் கலந்தாலோசித்ததன் பின்னர் அது சம்பந்தமான இறுதி முடிவுகளை புலிகளிடம் தெரிவிப்பார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இதற்காக திரு. டிக்ஸிற் இன்று மாலை அல்லது நாளை காலை பலாலிக்கு விஜயம் செய்யலாமென அறிய வருகிறது.

இச் சந்திப்பின் பின்னர் எடுக்கப்படும் முக்கிய முடிவுகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் மக்களுக்கு தெரிவிப்பார் எனவும் நம்பப்படுகிறது.

## அஞ்சலி

நேற்று ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட திலீபனின் பூதவுடல் வல்வைச் சந்தியை வந்தடைந்தபோது அங்கு உண்ணாவிரதம் இருந்த ஐவரும் எழுந்து வந்து தமது அஞ்சலியைக் கண்ணீர் மல்கச் செலுத்தினர் (உ-160)

# உணர்ச்சி....

[1ம் பக்கத் தொடர்ச்சி]
பந்தத்தைக் குலைக்க முயலும் தீயசக்திகளுக்குத் தமிழர்கள் கைப்பாவையாக வேண்டிய நிலைக்குத் தள்ளிவிடும்.

-இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல் குழு இலங்கைத் தமிழருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

திலீபனின் மரணத்துக்கும் ராசா வாசுதேவா, ஜோதீஸ்வரன் ஆகியோர் உட்பட நூற்றுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதற்கும் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கின்றோம்.

இலங்கைத் தமிழருக்குப் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் இந்தியா வழங்கும் என்று நம்பிக்கை தெரிவிக்கின்றோம்.

இந்த ஒப்பந்தம்செயல்படுவதற்கு எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

–இப்படி கூட்டணி அரசியல் குழு தெரிவித்துள்ளது (உ-எ)

# முல்லைத்தீவு -

(1ஆம் பக்க தொடர்ச்சி)
டிருப்பதாகவும் நீர்த்தன்மை குறைந்து வருவதாகவும் வைத்திய பரிசோதனை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திரு மதன் இன்றுடன் நான்காவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளார்.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெறும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அங்கும் இனமும் பலர் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகின்றனர். (உ-10)

# தமிழர்---

(5ம் பக்கத் தொடர்ச்சி)
ரேட் முன் ஆஜர் செய்தனர். மாஜிஸ்திரேட் காலவரை இன்றி என்னை விளக்க மறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

—இப்படி முத்துவீரன் நமசிவாயம் மனுவில் தெரிவித்து இருந்தார்.

எதிர் மனுதாரர்கள் மனுதாரரின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தனர்.

யா / நெல்லியடி மத்திய மகா வித்தியாலய
பாடசாலை அபிவிருத்திச் சங்க

**வருடாந்தப் பொதுக் கூட்டம்**

யா / நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1987-10-11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு இப் பாடசாலையின் மகளிர் பிரிவு மண்டபத்தில் நடைபெறும்.

சி. கிருஷ்ணபிள்ளை
செயலாளர்,
யா/நெல்லியடி ம. ம. வி.
பா. அபி. சங்கம்.

1987-9-26

யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்
கரவெட்டி

**6ம் ஆண்டு வகுப்பிற்கான பிரவேசப் பரீட்சை - 1988**

மேற்படி பரீட்சை தமிழ், கணிதம் ஆகிய இரு பாடங்களில் நடைபெறும்.

7-11-87 சனிக்கிழமை
9-00 — 10-00 தமிழ்மொழி
10-15 — 11-15 கணிதம்

இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க வேண்டிய மாணவர்கள் தற்போது ஆண்டு 5 இல் கற்பவராயும் 01-02-77க்குப் பின் பிறந்தவராயும் இருத்தல் வேண்டும்.

முழுப்பெயர், பிறந்த திகதி, தற்போது பயிலும் பாடசாலை, நிரந்தர விலாசம் ஆகிய விவரங்களுடன் 25-10-87க்கு முன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்துடன் பரீட்சைக் கட்டணம் ரூபா 10/- செலுத்தப்படல் வேண்டும்.

எஸ். ரேய் காந்தராஜ்
அதிபர்

யா/நெல்லியடி ம ம. வி.
கரவெட்டி.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்)லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால்,யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி; 28-09-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on September 28, 1987